1991 செப்டம்பர் 13]

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–58க்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

62. 1925 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29–5–1991 ஆம் நாளிட்ட 274 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 2/1899) 70-ஏ (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

63. தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 23–1–1991 ஆம் நாளிட்ட 37 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937ஆம்ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

64. சென்னை, இந்திய செஞ்சிலுவை சங்க நிவாரண குழுவிற்குச் சொந்தமான டி. எஸ். ஐ. 1631 எண் கொண்ட ஜீப்புக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போக்கு வரத்து-அ) துறையின் 18–9–1990 ஆம் நாளிட்ட 2112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

65. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 29–6–1990-ஆம் நாளிட்ட 638 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

66. தேசீய விமான நிலைய குழுமத்தை பொது உப யோகத்திற்கு பயன்படுத்துவது குறித்து தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 3–6–1991 ஆம் நாளிட்ட 163 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

67. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

68. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் 1989-1990 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

69. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90-ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

70. சேரன் பொறியியற் கழகத்தின் 1989–90-ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

71. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

25. கோரிக்கை எண் 17–கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92. (தமிழ், ஆங்கிலம்).

26. கோரிக்கை எண் 52–தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92. (தமிழ், ஆங்கிலம்).